


**13. 02. 2026**

தலைப்புச் செய்திகள்

1. வளர்ச்சி அடைந்த தேசத்தின் கட்டமைப்பிற்கு கல்வி, ஆரோக்கியத்துடன் பொறுப்புமிகு குடிமக்கள் தேவை என்று குடியரசு தலைவர் திருமதி திரௌபதி முர்மு தெரிவித்துள்ளார்.

2. நாடாளுமன்ற பட்ஜெட் கூட்டத்தொடரின் முதற்கட்ட கூட்டத்தொடர் இன்று நிறைவடைந்தது.

3. மத்திய உள்துறை அமைச்சரும், பிஜேபி மூத்த தலைவருமான திரு. அமித்ஷா பல்வேறு நிகழ்ச்சிகளில் பங்கேற்பதற்காக இன்று திருச்சி வருகிறார்.

4. தமிழ்நாட்டில் ஒரு கோடியே 31 லட்சம் பெண்களின் வங்கி கணக்குகளில் ஐந்தாயிரம் ரூபாய் உரிமை தொகை வரவு வைக்கப்பட்டுள்ளதாக முதலமைச்சர் திரு. மு. க. ஸ்டாலின் அறிவித்துள்ளார்.

5. சென்னையில் நடைபெறும் சேலஞ்சர் டென்னிஸ் ஆடவர் இரட்டையர் இறுதிபோட்டிக்கு கலியாண்டா பூனாச்சா, ஐசாரோ இணை முன்னேறியது.

இனி விரிவான செய்திகள்

குடியரசு தலைவர்

வளர்ச்சி அடைந்த தேசத்தின் கட்டமைப்பிற்கு அரசியல் நிலைதன்மை, வலுவான பொருளாதாரத்தோடு, ஆரோக்கியம், கல்வியில் சிறந்த பொறுப்புமிகு குடிமக்களும் தேவை என குடியரசு தலைவர் திருமதி திரௌபதி முர்மு தெரிவித்துள்ளார்.

புதுதில்லியில் ஆளுமைமிக்க பாரதத்திற்கான, கர்மயோகா தேசிய இயக்கத்தின் கீழ் இன்று உரையாற்றிய அவர், மக்களின் பங்களிப்பில்லாமல், தேசிய இலக்குகளை எட்டுவது மிகவும் கடினம் என்று குறிப்பிட்டார்.

சமச்சீரான முழுமையான வளர்ச்சிக்கு முன்னேற்றமும், ஆன்மீகமும், சிறந்த பண்பாடும் அவசியம் என்றார்.

நாட்டின் பொருளாதார வளர்ச்சி வளத்தையும், தொழில்நுட்ப வளர்ச்சி புதியகண்டுபிடிப்புகளையும், போட்டியையும் முன்னெடுத்து செல்வதாக குறிப்பிட்டார்.

இவை அனைத்தும் வளமான தேசத்திற்கு அடித்தளமாக அமைகிறது என்றார்.

பலன்களை எதிர்பாராமல் நாட்டின் குடிமக்கள் அர்ப்பணிப்புடனும், நேர்மையுடனும் செயலாற்ற வேண்டும் என்று கேட்டுக்கொண்டார்.

************

பிரதமர் கர்த்தவ்

நாட்டின் நிர்வாக ஆளுமை திறனை பறைசாற்றும் வகையில் பிரதமர் திரு. நரேந்திரமோடி புதுதில்லியில் நிர்வாக சேவைகளுக்கான புதிய அலுவலக கட்டடத்தை இன்னும் சற்று நேரத்தில் திறந்துவைக்கிறார்.

இதன்படி முதல், இரண்டாவது கட்ட கடமை இல்லங்களும், பொதுமக்கள் சேவைக்காக இன்று திறக்கப்படவுள்ளன.

இந்த நிர்வாக கட்டடத்தில் பிரதமர் அலுவலகம், தேசிய பாதுகாப்பு குழு செயலகம், அமைச்சரவை செயலகம் செயல்பட வகை செய்யப்பட்டுள்ளது.

கடமை இல்லத்தில் நிதி, ராணுவம், சுகாதாரம், குடும்பநலன், கல்வி, தகவல் மற்றும் ஒலிபரப்பு அமைச்சகங்கள் செயல்படும்.

************

மக்களவை

நாடாளுமன்ற பட்ஜெட் கூட்டத்தொடரின் இறுதி நாளான இன்று இரு அவைகளும் அடுத்த மாதம் 9ஆம் தேதிவரை ஒத்திவைக்கப்பட்டன.

முன்னதாக மக்களவையில் பல்வேறு பிரச்சனைகளை எழுப்பி எதிர்கட்சிகள் அமளியில் ஈடுபட்டதால் அவை முதலில் நண்பகல் வரை ஒத்திவைக்கப்பட்டது.

மீண்டும் அவை கூடியபோது அமளி தொடரவே வரும் 9ஆம் தேதிவரை மக்களவை ஒத்திவைக்கப்பட்டது.

மாநிலங்களவையில் இன்றைய அலுவல்கள் சுமூகமாக நடைபெற்ற நிலையில் அவைத்தலைவர் அவையை வரும் 9ஆம் தேதிவரை ஒத்திவைத்தார்.

நாடாளுமன்ற பட்ஜெட் கூட்டத்தொடரின் முதல்கட்ட கூட்டம் கடந்த 28ஆம் தேதி குடியரசு தலைவர் உரையுடன் தொடங்கிய நிலையில், பொருளாதார ஆய்வறிக்கை, பட்ஜெட் தாக்கல், இவற்றின் மீதான விவாதங்களுக்கு பின்னர் அவை இன்று ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

அடுத்த கட்ட கூட்டம் அடுத்த மாதம் 9 ஆம் தேதி தொடங்கி ஏப்ரல் 2ம் தேதிவரை நடைபெறும்.

************

கஜேந்திரசிங் ஷெகாவத்

வளர்ச்சி அடைந்த தேசத்திற்கான மைல் கல்லாக வரும் நிதியாண்டிற்கான பட்ஜெட் திகழ்கிறது என்று மத்திய

கலாச்சார அமைச்சர் திரு.கஜேந்திரசிங் ஷெகாவத் தெரிவித்துள்ளார்.

பட்ஜெட் கூட்டத்தொடரின் முதல்கட்ட கூட்ட நிறைவை ஒட்டி நாடாளுமன்ற வளாகத்தில் செய்தியாளர்களிடம் பேசிய அவர், இக்கூட்டத்தொடரில் எதிர்கட்சிகளின் செயல்பாடுகள் முறையாக இல்லை என்று கூறினார்.

நிதிநிலை அறிக்கை மீதான விவாதங்களில் எதிர்கட்சிகள் பங்கேற்காதது ஜனநாயக மதிப்பீடுகளுக்கு எதிரானது என்றார்.

************

ஜே.பி.நட்டா மக்களவை

மனித ஆரோக்கியத்திற்கு தகுதியற்றதாக ஒரு மருந்து கண்டறியப்பட்டால் உடனடியாக சந்தையிலிருந்து அது திரும்பபெறப்படுவதாக மத்திய சுகாதார குடும்பநலத்துறை அமைச்சர் திரு.ஜே.பி.நட்டா தெரிவித்துள்ளார்.

மக்களவையில இன்று கேள்வி ஒன்றுக்கு பதில் அளித்த அவர் கோடியின் அடிப்படையிலான இருமல் மருந்து உட்கொண்டு யாரும் உயிரிழந்ததாக இதுவரை தகவல் இல்லை என்று சுட்டிக்காட்டினார்.

இருப்பினும் மருந்துகளை உட்கொள்வதால் மரணம் நேரிடுவதாக அரசுக்கு தகவல் வந்தால் உடனடியாக

விரிவான ஆய்வுகள் நடத்தப்படுவதாக அவர் எடுத்துரைத்தார்.

************

## பிரதமர் வாழ்த்து

பங்களாதேஷ் பொது தேர்தலில் வெற்றிபெற்றுள்ள தேசிய வாத கட்சி தலைவர் தாரிக் ரஹ்மானுக்கு பிரதமர் வாழ்த்து தெரிவித்துள்ளார்.

ஜனநாயகம், முன்னேற்றம், அனைவரையும் உள்ளடக்கிய வங்கதேச பயணத்திற்கு இந்தியாவின் ஆதரவு தொடரும் என்று பிரதமர் உறுதி அளித்தார்.

இருநாடுகளுக்கிடையிலான பன்முக உறவை மேலும் வலுப்படுத்தும் வகையில் திரு.ரஹ்மானுடன் இணைந்து பணியாற்றுவதை தாம் ஆவலுடன் எதிர்நோக்கி உள்ளதாக பிரதமர் குறிப்பிட்டார்.

************

## உலக வானொலி தினம்

உலக வானொலி தினம் இன்று கொண்டாடப்படுகிறது.

குடியரசு துணை தலைவர் திரு.சி.பி.ராதாகிருஷ்ணன் விடுத்துள்ள செய்தியில் டிஜிட்டல் தளங்கள், பாட்காஸ்ட் என பரிணாம வளர்ச்சி அடைந்து தலைமுறைகளை கடந்து மக்களை இணைக்கும் வானொலியின் முக்கியத்துவத்தை கொண்டாடுவோம் என்று கூறியுள்ளார்.

பிரதமர் திரு.நரேந்திரமோடி தமது செய்தியில் கிராமங்கள் முதல் நகரங்கள் வரை மக்களின் நம்பிக்கைக்குரிய குரலாக வானொலி திகழ்வதாக கூறியுள்ளார்.

மனதின் குரல் நிகழ்ச்சியின் மூலம் வானொலியின் வலிமையை தாம் உணர்ந்துள்ளதாக கூறியுள்ள பிரதமர் வரும் 22ஆம் தேதி நடைபெற உள்ள நிகழ்ச்சிக்கான கருத்துக்களை மக்கள் பகிர வேண்டும் என குறிப்பிட்டுள்ளார்.

மத்திய தகவல் ஒலிபரப்புத்துறை இணை அமைச்சர் டாக்டர் எல்.முருகன் விடுத்துள்ள வாழ்த்து செய்தியில் மக்களுக்கு செய்திகளையும், பிற தகவல்களையும் வழங்குவதில் வானொலி முக்கிய பங்காற்றுவதாக கூறியுள்ளார்.

வாய்ஸ்

வானொலி தினத்தை ஒட்டி தத்தம் அனுபவங்களை நேயர்கள் எமது செய்திப்பிரிவிடம் பகிர்ந்துகொள்கையில்

வாய்ஸ்

************

அமித்ஷா

மத்திய உள்துறை அமைச்சரும், பிஜேபி மூத்த தலைவருமான திரு.அமித்ஷா பல்வேறு நிகழ்ச்சிகளில் பங்கேற்பதற்காக இன்று இரவு திருச்சி வருகிறார்.

வரும் சட்டப்பேரவை தேர்தலை ஒட்டி தேசிய ஜனநாயக கூட்டணியின் நிலைப்பாடு, முன்னேற்பாடுகள் குறித்து பிஜேபி மூத்த தலைவர்களுடன் அவர் ஆலோசனை மேற்கொள்ள உள்ளார்.

காரைக்காலில் நாளை நடைபெறும் கட்சி சார்ந்த நிகழ்ச்சியில் பங்கேற்கும் திரு.அமித்ஷா, அங்கு நடைபெறும் பொதுக்கூட்டத்தில் உரையாற்றுகிறார்.

************

முதலமைச்சர் - உரிமைதொகை

தமிழ்நாட்டில் மகளிர் உரிமைத்தொகை திட்டத்தின் கீழ் ஒரு கோடியே 31 லட்சம் மகளிருக்கு ஐந்தாயிரம் ரூபாய் இன்றுகாலை வரவு வைக்கப்பட்டுள்ளதாக முதலமைச்சர் திரு.மு.க.ஸ்டாலின் அறிவித்துள்ளார்.

பிப்ரவரி, மார்ச் ஏப்ரல் மாத தொகையுடன் கோடை கால சிறப்பு தொகையாக இரண்டாயிரம் ரூபாய் என மொத்தம் ஐந்தாயிரம் ரூபாய் வழங்கப்பட்டுள்ளதாக கூறியுள்ளார்.

திமுக மீண்டும் ஆட்சிக்கு வந்தால் இந்த உரிமை தொகை இரண்டாயிரம் ரூபாயாக உயர்த்தப்படும் என்றும் அறிவித்துள்ளார்.

இதனிடையே தூத்துக்குடியில் செய்தியாளர்களிடம் பேசிய மாநில சமூகநலத்துறை அமைச்சர் திருமதி கீதாஜீவன் மகளிர் உரிமை தொகை திட்டத்தின் கீழ் ஆண்டிற்கு 3 லட்சம் ரூபாய்க்கு குறைவாக வருமானம்

உடைய மகளிர் இதுவரை இத்தொகை பெறவில்லை எனில் அவர்களின் மனுக்கள் பரிசீலிக்கப்பட்டு விரைவில் வழங்கப்படும் என்று தெரிவித்தார்.

தமிழ்நாட்டில் கடந்த ஐந்தாண்டுகளில் ஒன்றரை லட்சம் இளைஞர்களுக்கு அரசு வேலைவாய்ப்பு வழங்கப்பட்டுள்ளதாக முதலமைச்சர் கூறியுள்ளார்.

TNPSC உள்ளிட்ட தேர்வு முகமைகள் மூலம் தேர்வு செய்யப்பட்ட 9 ஆயிரத்து 801 நபர்களுக்கு பணிநியமன ஆணைகளை இன்று வழங்கி பேசிய அவர், இளைஞர்களுக்கான வளமான எதிர்காலத்தை உருவாக்க முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக கூறினார்.

வாய்ஸ்

இதனிடையே சிவகங்கை மாவட்டம் கீழடியில் 4.5 ஏக்கர் பரப்பளவில் 65 ஆயிரத்து 380 சதுர அடியில் 2 காட்சி கூடங்களுடன் 24 கோடியே 30 லட்சம் ரூபாய் மதிப்பில் அமைக்கப்பட்டுள்ள கீழடி திறந்தவெளி அருங்காட்சியகத்தினை சென்னை தலைமை செயலகத்திலிருந்து காணொலி வாயிலாக முதலமைச்சர் இன்று திறந்துவைக்கிறார்.

************

சிவசங்கர்

பெரம்பலூர் மாவட்டத்தில் புவியியல் கனிம வளங்களையும், படிமங்களையும் பாதுகாக்க தேவையான

வசதிகளை செய்யும் பொருட்டு 10 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதாக மாநில போக்குவரத்து துறை அமைச்சர் திரு.சிவசங்கர் தெரிவித்துள்ளார்.

கொளக்காநத்தம் அரசு கலை அறிவியல் கல்லூரியில் மாணாக்கர் விடுதிகளை இன்று திறந்துவைத்து பேசிய அவர், இக்கல்லூரியில் 16 கோடியில் புதிய கட்டிடம் கட்ட நிதி ஒதுக்கப்பட்டுள்ளதாக கூறினார்.

************

கே.என்.நேரு

விருதுநகர் மாவட்டத்தில் நகர்புற சாலைகள் மேம்பாட்டு திட்டத்தின் கீழ் 24 கோடி ரூபாய் மதிப்பீட்டில் 154 பணிகளுக்கு மாநில நகராட்சி நிர்வாகத்துறை அமைச்சர் திரு.கே.என்.நேரு வருவாய் துறை அமைச்சர் திரு.கே.கே.எஸ்.எஸ்.ஆர்.ராமசந்திரன் இன்று அடிக்கல் நாட்டினார்.

இந்நிகழ்ச்சியில் அருப்புக்கோட்டையில் புதிய பேருந்து நிலையம் திறந்துவைக்கப்பட்டு பல்வேறு திட்ட பணிகளுக்கு அடிக்கல் நாட்டப்பட்டது.

************

தண்ணீர் திறப்பு

கிருஷ்ணகிரி மாவட்டம் ஊத்தங்கரை பாம்பாறு நீர்தேக்கத்திலிருந்து இன்றுமுதல் 120 நாட்களுக்கு வினாடிக்கு 42 கன அடி வீதம் தண்ணீர் திறக்கப்பட்டது.

இதன்மூலம் இப்பகுதிக்குட்பட்ட 16 கிராமங்களை சேர்ந்த நான்காயிரம் ஏக்கர் நிலம்பாசன வசதிபெறும்.

************

ஜல்லிக்கட்டு

திண்டுக்கல் நல்லமநாயக்கன்பட்டி புனித அந்தோனியோர் ஆலய திருவிழாவை ஒட்டி ஜல்லிக்கட்டு போட்டி இன்று நடைபெறுவதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

வாய்ஸ்

************

டென்னிஸ்

சென்னையில் நடைபெறும் சேலஞ்சர் டென்னிஸ் ஆடவர் இரட்டையர் இறுதிபோட்டிக்கு இந்தியாவின் கலியாண்டா பூனாச்சா, தாய்லாந்தின் ஐசாரோ இணை முன்னேறியது.

இன்று நடைபெற்ற அரையிறுதியில் இந்த இணை இந்தியாவின் பிரஜ்வால், நித்தின்குமார் இணையை 6-4 6-1 என்ற நேர் செட்களில் வென்றது.

************

இத்துடன் இந்த செய்தியறிக்கை முடிவடைந்தது